## Talk To Your Baby – quick tips

# Talking with your baby

**Learning to talk is one of the most important and complex skills your child will accomplish. It seems to happen naturally, but in fact you have a very important role to play. The more you talk to your baby, the more you enable her to become a good talker and a confident, happy child.**



- Talk about what you're doing throughout the day – when you're bathing or feeding your baby or changing her nappy.
- Talk about the things you see on the way to the shops, or at the supermarket. Try to talk about the things your child shows an interest in.
- Talk in the language that you know best - it doesn't have to be English.
- Look at your baby as you talk and give him time to respond to your chatter.
- Answer your baby's noises and babbles.
- Cuddle up together and read a favourite book or talk about the pictures.
- Have fun with nursery rhymes or any song, especially those with actions.
- Listen carefully and give your toddler time to finish talking.
- If your toddler says something incorrectly, say it back the right way, e.g. "Goggy bited it." "Yes, the dog bit it, didn't he."
- Try to watch TV together so you can talk about what happens.

## உங்கள் குழந்தையுடன் பேசுங்கள் - விரைவு குறிப்புகள்

# உங்கள் குழந்தையுடன் உரையாடுதல;

**உங்கள் குழந்தை பேசக் கற்றுக் கொள்வதென்பது மிக முக்கியமான மற்றும் சிக்கலான திறனாகும். இது தானாக நடப்பது போல் தோன்றுகிறது ஆனால் இதில் உங்களுக்கு மிக முக்கியமான பங்கு உள்ளது நீங்கள் எந்த அளவிற்கு குழந்தையுடன் அதிகமாகப் பேசுகிறீர்களோ அந்த அளவிற்கு நீங்கள் உங்கள் குழந்தையை நன்கு பேசக்கூடிய, தன்னம்பிக்கை கொண்ட மகிழ்ச்சியான குழந்தையாக மிளிர உதவுகிறீர்கள்.**

- நாள் முழுவதும் நீங்கள் செய்யும் வேலைகளைப் பற்றிப் பேசுங்கள் - குழந்தையைக் குளிப்பாட்டும் போதும் உங்கள் குழந்தைக்கு உணவூட்டும் போதும் மற்றும் குழந்தையின் கச்சையினை மாற்றும்போதும் இவ்வாறு பேசுங்கள்.
- கடைக்குச் செல்லும் வழியிலும் அல்லது பல்பொருள் சிறப்பங்காடியிலும் நீங்கள் பார்ப்பவைகளைப்பற்றிப் பேசுங்கள். உங்கள் குழந்தை ஆர்வம் காட்டுகின்றவற்றைப் பற்றிப் பேசுங்கள்.
- உங்களுக்கு நன்கு தெரிந்த மொழியில் பேசுங்கள். அது ஆங்கில மொழியாக இருக்கவேண்டுமென்பதில்லை.
- நீங்கள் பேசும்போது குழந்தையைப் பார்ப்பதுடன் உங்கள் பேச்சிற்கு பதிலளிக்க சிறிது அவகாசம் கொடுங்கள்.
- உங்கள் குழந்தையின் ஒலிகளுக்கும் மழலை மொழிகளுக்கும் பதில் அளியுங்கள்.
- குழந்தையை அரவணைத்துக் கொண்டு விருப்பமான புத்தகத்தை படியுங்கள் அல்லது படங்களைப் பற்றி பேசுங்கள்.
- செயல் நடவடிக்கையுடன் கூடிய மழலையர் பாடல்கள் மற்றும் ஏதேனும் பாடல்களை பாடி மகிழ்ச்சியூட்டுங்கள்.
- கவனமாக உற்றுக்கேட்பதுடன் உங்கள் குழந்தை பேசி முடிக்க கால அவகாசம் அளியுங்கள்.
- உங்கள் குழந்தை ஏதேனும் தவறாகக் கூறினால் அதைச் சரியான முறையில் திருப்பிக் கூறுங்கள். உதாரணமாகக் குழந்தை, ஒரு நாய் கடித்த சம்பவத்தை 'காகி கடிக்கிறது' என்று தவறாகச் சொன்னால், அதை 'நாய் கடித்துவிட்டது இல்லையா!' என்று கேட்டு தவறை திருத்த வேண்டும்.
- குழந்தையுடன் சேர்ந்து தொலைக்காட்சி பாருங்கள். அதன்மூலம் தொலைக்காட்சியில் வருவதைப் பற்றிப் பேசலாம்.

National Literacy Trust

Talk To Your Baby

**Quick tips may be photocopied. For more information visit www.talktoyourbaby.org.uk**
**Talk To Your Baby is an initiative of the National Literacy Trust.**

Illustration by Posy Simmonds